Registered No. M—253.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1901 ஆம் நவம்பர் மீ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—10.

விஷயங்கள்.

தனிப்பாடல் :—T. P. சிவராம பிள்ளை.
அலங்கார இலக்கணம் :—அ. குமாரசுவாமிப் புலவர்.
முழு முதற் கடவுள் கடை முதற்பெருடா நிலை :—T. P. சிவராம பிள்ளை.
காட்டுப் பாஷைகள் :—Extract.
வாழ்க்கை வழுத்துரை :—K. N. சிவராஜ பிள்ளை B. A.
எரிமலை :—A. K. கிருஷ்ணய்யங்கார்.
சாந்தோக்கியோபநிடதம் :—அ. குமாரசுவாமிப் புலவர்.
இரசாயன தாது :—P. துரைசாமி செட்டியார் B. A.
செல்வியாள் :—A. K. கிருஷ்ணய்யங்கார்.
பிங்கல நிகண்டு :—மாகறல்—கார்த்திகேய முதலியார்.
பத்திராதிபர் குறிப்புகள் :—
சமாசாரக் குறிப்புகள் :—

பத்திராதிபர்.
[illegible]ள்ளல். சோ. சிவஞானதேசிகர்.

நாகர்கோயில் விக்டோரியா பிரஸில் பதிப்பித்து
திருவனந்தபுரத்தில் வெளிப்படுத்தப்படுகின்றது.

[வருஷ சந்தா ரூ. 2.] 1901. [சஞ்சிகை அணா 4.]

பத்திராதிபர் குறிப்புகள்.

கல்வியும் இடைவிடா வூக்கமும் மிக்குடையராய் நமது சுதேசப் பழமை ஆராய்ச்சி (Travancore Archaeological Survey) யைச் சலிப்பின்றித் தலை நின்று நடாத்தும கனம். T. S. கணேச பிள்ளையவர்களை லண்டன் ஸொஸைட்டி ஆவ் ஆர்ட்ஸ் (Society of Arts) என்ற சங்கத்தில் ஓர் அங்கத்தினராகத் தெரிந்தெடுத்தமை அறிந்து மகிழ்கின்றோம்.

'சைவாதீன சீர் திருத்த சங்கம்.'—இப்பெயரிய சங்கமொன்று திருநெல்வேலியில் உள்ள சைவாதீன சிட்டர்களாகிய சில பிரபுக்களால் ஸ்தாபிக்கப்பட்டும், சீர் திருத்த விஷயமாய் முயற்சிக்கப்பட்டும் வருகின்றமை அறிந்து உவக்கின்றோம். ஆனால் தம் நிலைக்கடாத இழிதொழிலில் தலையிட்ட வழிகாட்டியாகத் தற்காலம் நிற்கும் தருமப் பொருள் அவ்வாறு செல்ல விடாது இச்சங்கம் தன் வயப்படுத்தினலன்றி இச்சங்க நோக்கம் சிறிதும் பயன் பெறாதென்று துணிவாய்க் கூறுவோம்.

தேரூர் 'ஸமூகாய பரிபாலன ஸபை.'—இப்பெயர் வாய்ந்த ஸபையொன்று தேரூரில் ஏற்படுத்தியிருக்கிறதாகக் கேட்டு மிகச் சந்தோஷிக்கின்றோம். ஆனால் இச்சபையின் நோக்கங்களிவையென நன்றாகத் தெரியவில்லை. நாஞ்சில் நாட்டிலுள்ள ஒவ்வொரு கிராமத்திலும் இவ்வாறு சபைகளேற்படின் மேல் மிக நன்மையுண்டாகுமென்பது திண்ணமே. ஆனால் 'கட்டறுத்தல்' என்னும் வழக்குக்கு இலக்காகா திருத்தல் வேண்டுமே எனக் கவல்கின்றோம்.

திருவாங்கூர்ப் பழமை ஆராய்ச்சி (Travancore Archaeological Survey).—தற்கால ஏற்பாட்டின் ஒன்றாய் நின்ற இந்த டிப்பார்ட்டுமெண்டைச் சென்ற ஆவணி மாதம் முதல் நம் காருண்ணிய கவர்ண்மெண்டார் உறுதிப்படுத்தி இருக்கிறார்கள். இது நம்மவர்க்குப் பெருமகிழ்ச்சி யளிக்கத் தக்கதே.

திருத்தம்.—9-வது இலக்கத்தில் வந்த சரம கவி T. G. நாராயணசாமிப் பிள்ளை அவர்களால் இயற்றப்பட்டது.

அறிவித்தல்.—கையொப்பநேயர்காள்! வருடக் கடைசியாய் விட்டமையால் V. P. P. வழியாய் அனுப்பப்படும் 11-ம் இலக்கத்தை தயை செய்து ஆதரிப்பீர்களாக.—பத்திராதிபர்.

அறிவு விளக்கம்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

"எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."

புத்தகம்—I. | 1901 ஆம் நவம்பர் மீ 10-உ. திருவனந்தபுரம். | இலக்கம்—10.

தனிப்பாடல்.

அறிந்தாங் கறியும் அறிவும், அறிவித்
தறியு மறிவுமென் றறிவிரு வகைத்தே
அவற்றுள்,
அறிந்தாங் கறிவதை அறிவதோ வரிதே!
அறிந்தாங் கறிவ தறிவித் தறிவதைப்
பின்முன் னின்று பிறங்குவிக் கும்மே!
அவற்றுட்
பின்னின் றுணர்த்தப் பிறங்கும் பிறக்கம்
உயிருல கெனவிரு வகைத்தே அவற்றுள்,
உயிரின் பிறக்க மென்ப துயிர்தான்
தன்னை நோக்கித் தானிற் பதுவே!

264

உலகுணர்
வியற்கையுஞ் செயற்கையு மெனவிரு வகைத்தே
இவற்றுள்,
இயற்கை யென்ப தியங்கியல் நிலையிற்
பொருள் புணர்ந் துள்ளொடு புறத்து நின்றுணர்வே
உண்ணின்றுணர்ச்சி புறத்து நின்றுணர்ச்சியை
இன்றியமைதலோ வின்றே ஆங்கவ்
வியற்கையுஞ் செயற்கையின் றிலங்கு தலின்றே
செயற்கையைக்
கல்வி கேள்விகளிற் காண்டுங், கல்வியுங்
கேள்வியின்றிக் கிளர்தலோ வின்றே
இதனைக்
கற்றில னாயினுங் கேட்க வென்றுங்
கற்றலிற் கேட்டலே நன் றென்று
முரைத்த சான்றோரு முளரே, யதா அன்
றரிதினிற் பெற்றவிம் மக்க ளாக்கையிற்
கற்றற் கருவி யொன்றுங்
கேட்டற் கருவி யிரண்டுங் கண்டங்
கறிந்தாங் கறியு மறிவு முண்டன்றே!
அதனால்
உள்ளத் தகலிற் கள்ளமி னாலிற்
கேள்வி நெய் வாங்கிக் கிளர்ந்தொளி விடுவ
தறிவு விளக்க மென் றறிதியென் னெஞ்சே.

அலங்கார இலக்கணம்.

தமிழ்ப் பாஷைக்குரிய இலக்கணம் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து வகைப்படும். குண்டலம், முதலிய ஆபரணங்கள் சரீரத்தைச் சிறப்பித்தல் போல அழகு செய்து கவிகளைச் சிறப்பித்தலால் அணியிலக்கணமே அவற்றுண் மிகச் சிறந்தது. அணியெனினும் அலங்காரமெனினும் ஒக்கும்,

வடமொழியிலே அலங்கார சாத்திரம் பலராலும் விரிவாகச் செய்யப்பட்டிருக்கின்றன. அவை, காவியாதர்சம், சாகித்தியதர்ப்பணம், சரஸ்வதீகண்டாபரணம், சந்திராலோகம், குவலயானந்தம், சித்திரமீமாஞ்சை முதலியன. தமிழ்த் தண்டியலங்காரத்திற்கும் வீரசோழியத்திலே சொல்லப்பட்ட அலங்காரத்திற்கும் முதனூல் காவியாதர்சம். சாகித்திய தர்ப்பணத்திலே நாடகத்துக்குரிய அலங்காரங்களும், உவமை முதலிய அலங்காரங்களும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. சரஸ்வதீ கண்டாபரணத்திலே காப்பியலக்கணம், காப்பியத்திலே விலக்கப்படுஞ் சொற்குற்றம், சொற்றொடர்க்குற்றம், பொருட்குற்றம், சித்திரகவி முதலியன அலங்காரங்களோடு விசேடமாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அக்கிநிபுராணத்திலும் அலங்காரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன.

தமிழ் மொழியிலே ஐந்திலக்கணங்களுங் கூறிய தொல்காப்பியர் உவமவியலிலே உவமை ஒன்றே கூறி அதன் கண்ணே பல அணிகளுமடங்குமாறு செய்தனர். உவமையாவது ஒரு பொருளைப் புலப்படுத்தற்கு அப்பொருளோடு ஒப்புமை காட்டி வேறொரு பொருளைக் கூறுதல். ஒப்புமை, தொழில், பயன், வடிவம், வண்ணம் என்னும் நான்குங் காரணமாகச் சொல்லப்படும். புலியன்ன மறவன் என்பது உபமாநமாகிய புலியிடத்தும், உபமேயமாகிய மறவனிடத்துமுள்ள பாய்தற்றொழில் காரணமாக ஒப்புமை கூறுதலின் வினையுவமமெனப்படும். பயன் முதலியனவுமிவ்வாறு கொள்ளப்படும்.

தண்டியாசிரியர், இவ்வுவமையை விரியுவமை, தொகையுவமை, இதரேதரவுவமை, சமுச்சயவுவமை முதலியனவாக விரித்துக் கூறுவர். சந்திராலோகாலங்காரகாரரும் குவலயாநந்த காரரும் தண்டியாசிரியர் கூறிய உவமைகளுள்ளே சிலவற்றை வேறலங்காரமாகக் கொள்வர். சாகித்திய தர்ப்பணகாரர் சிலவுவமைகளைத் தண்டியாசிரியரினும் விசேடமாகக் கூறுவர். தண்டியாசிரியர் கூறிய ஐயவுவமையையும்

மறு பொருளுவமையையும், சந்திராலோககாரர் முறையே சந்தேகாலங்காரம் எனவுந் திருட்டாந்தவலங்காரமெனவுங் கூறுவர்.

தோல்காப்பியர் விரியுவமையையுந் தொகையுவமையையுஞ் "கூட்டிக் கூறுவுவமமாயின்" என்னுஞ் சூத்திரத்தி லடக்கினர். இதரவிதரவுவமையைத் "தடுமாறுவமம்" என்னுஞ் சூத்திரத்தி லடக்கினர். இன்னுந் தண்டியாசிரியர் கூறிய விபரீதவுவமையை "பொருளேயுவமம்" என்னுஞ் சூத்திரத்துளடக்கினர். இச்சூத்திரவுரையிலே இவ்வுவமை தொகையாய் வருதலே உருவகமென்பர். வேறும் பலவுவமைகளை "வேறுபடவந்த" என்னுஞ் சூத்திரத்திலடக்கினர்.

சித்திரமீமாஞ்சை என்னும் அலங்காரகாரராகிய அப்பயதீக்ஷிதர் உவமையொன்றே வித்துவான்கள் வேறுபடுத்திச் சொல்லுஞ் சித்திரத்தினுல் பலவிதமான அலங்காரமாகுமென்பர். அவர் கூறுமாறு சிலகூறுதும். "சந்திரன் போன்ற முகம்" என்பது உவமை. இதனை வேறுபடுத்திச் "சந்திரனை ஒக்கும் முகம்; முகத்தை ஒக்குஞ் சந்திரன்" என்பது உபமேயோபமை என்னு மணியாகும். இதனைத் தண்டியாசிரியர் இதரேதர வுவமையென்பர். அவ்வாறே "முகம் போன்றது முகம்" என்பது அநன்வயாலங்காரம். இதனைத் தண்டியாசியர் பொதுநீங்குவமையென்பர். "முகம்போன்றது சந்திரன்" என்பது பிரதீபாலங்காரம். இதனைத் தண்டியாசிரியர் விபரீதவுவமை என்பர். "சந்திரனைக் கண்டவுடன் முகத்தை நினைக்கிறேன்" என்பது நினைப்பணி. "முகமே சந்திரன்" என்பது உருவகம். "முகசந்திரனுல் வருந்தாபத்தைச் சகிக்கிருல்" என்பது ஐயவணி. "சந்திரனென்று முகத்தைச் சகோரந் தொடர்கின்றது." என்பது மயக்கவணி. இதனை தண்டியாசிரியர் திரிபதிசய மென்பர். "சத்தியமாகச் சந்திரன்" என்பது தற்குறிப் பேற்றம். "இது சந்திரன்" என்பது அதிசயவணி. "முகத்தினுலே சந்திரனையுங் கமலத்தையும் வென்ருள்" என்பது ஒப்புமைக் கூட்டவணி. "இது சந்திரன் முகமன்று" என்பது அவறுதியணி. "நான் முகங்கண்டு மகிழ்கிறேன் சந்திரனைக்கண்டு சகோரம் மகிழ்கின்றது" என்பது எதிர்ப்பொருளுவமை. "முகம் சந்திரனுடைய அழகை யடைகின்றது" என்பது நிதர்சனவணி. "களங்கமில்லாத முகம் சந்திரனின்று மேலாகின்றது." என்பது வேற்றுமையணி. இவ்வாறே இவ்வுவமை இன்னும் பலவிதமாகச் சொல்லும் வகையினுலே வேறுபடுகின்றது.

முழு முதற் கடவுள்

கடை முதற்றொடர் நிலை.

1.

முழுமுதல் யாதெங் கெவற்றையுங் கண்டங் கவைமுழுதுங்
கெழுமுதல் யாது கெழுமியுங் கிட்டரி தாய்க்கிளைத்துப்
பழுமரந் தேரும் பறவையிற் சார்ந்தன்பிற் பல்லுயிருந்
தொழுமுதல் யாததன் றன்மை யீதென்றொன்றுந் தோன்றிலதே.

2.

இல்லதென் பார்சில ருள்ளதென் பார்பல ரிவ்விரண்டு
மல்லதென் பார்சில ரவ்வவர்க் குள்ள வறிவளவிற்
சொல்வதெல் லாஞ்சொலத் தோன்றாத் துணையாய்த் துகளறுக்க
வல்லதி யாதம் முழுமுதற் காணிய வாழ்த்துதுமே.

3.

மேதக்க கல்வியுங் கேள்வியுங் கேட்ப விரித்துரைக்கு
நாதக்க நல்லறி வெல்லாம் படைத்துமெ ஞானென்பதான்
மோதிக் குடைந்தெம் முழுமுதற் காண்டொறு முட்டிமுட்டி
நோதக்க வல்லது காண்டக்க வாகி றணங்கரிதே.

4.

நுண்ணிய நூலின் றுறைதொறும் போய்ப்போய் நுழையுந்தொறு
மெண்ணிய நுண்பொரு ளெல்லாந் தெரிபவ ரேனுமிக்க
வண்ணிய தாய்நம் முழுமுத லாய்ந்துறின் றவ்வறிவி
னுண்ணிறை யின்றமை யோர்வரி தீதிறும் பூதுடைத்தே.

5.

தேடித் திரிந்திலன் றேடத் தெரிந்திலன் றேடியுனைக்
கூடித் திரிபவர் கூட்டந் தெரிந்திலன் கும்பிட்டுனைப்
பாடிக் கசிந்திலன் பாழ்வயி றோம்பப் படுந்துயரால்
வாடிக் கிடந்தனன் மற்றொன் றறிந்திலன் வாழ்முதலே.

6.

வாழ்வின் மகிழ்ந்தும் வறுமையி னொந்துமா ழாந்தறியாத்
தாழ்வின் மிகத்தடு மாறுகின் றேனையுந் தாங்குதியோ
சூழுங் கதிர்க்கற்றை நாப்பட் டௌங்கொளி விட்டிருளைப்
போழுஞ் சுடரே யறிஞர்க ளன்பினுட் புக்கவொன்றே.

7.

ஒன்றே நினைந்திட்ட வொன்றே துணிந்திட்ட வொன்றுபற்றி
நின்றே கரைந்திட் டதன்கழ லொன்றே நிலைக்களமென்
றின்றே புகுந்திட் டிருக்கக் கருதுகின் றேற்கினியஃ
தென்றே தருவதென் றெண்ணுமட் டென்மட் டிரங்குவதே.

8.

இறக்குந் தொறும்விரிந் தேறுந் தொறுஞ்சுருங் கும்மியல்பிற்
பிறக்கும் பொருளொன் றதுவே முதற்பொருள் பேசினெல்லாங்
கறங்கிற் பெயர்ந்தங் கதினின்று கொட்பது கண்டறியா
துறங்கும் விழிக்கு மிதுவோ வுணர்வென் றுரைப்பதுவே.

9.

உரையு முணர்வுஞ்சென் றெட்டாத வொன்றை யுணர்தருமுற்
றிரையு நுரையும் வருதல்கண் டங்கதைத் தேடுதற்கே
விரையும் விரையுந் தொறுந்தோறு மென்மெல வேவிளங்கிக்
கரையுங் கரையுங் கரையும்பைப் பையவெக் கன்னெஞ்சமே.

10.

கல்லும் புனலும் வளியு மொளியுங் கனலுமெல்லா
மல்லும் பகலு மளந்திடு வீரவற் றோடளந்து
புல்லும் பொருளையு மப்பொருட் குட்பொரு ளாய்ப்புணர்ந்து
வெல்லும் பொருளையுங் கண்டா லவற்றை விளக்குமினே.

11.

விளக்கும் பொருளும் விளங்கும் பொருளும் விளங்குவதால்
அளக்கும் பொருளும் வகுத்தறி யாதங் கவற்றையெல்லாங்
கலக்கும் பொருளைக் கலக்கலின் னுங்கலக் கற்பொருட்டோ
விளக்கும் பொருட்டோ வருட்டிற மீதென்று விண்டிலதே.

12.

விண்முத லாய பொருள்களு மப்பொருண் மேவிநிற்குங்
கண்முத லாய பொறிகளு மப்பொறி காணநிற்கும்
பண்முத லாய புலங்களு மப்புலம் பற்றுளத்தே
எண்முத லாயுள்ள றனைத்தையுந் தாண்டி யிருக்கின்றதே.

13.

இருக்கு முதற்பொரு ளில்லென்ற வுள்ளதி லேசிறைந்த
செருக்கென்ப தொன்றறி யாமையொன் றுள்ளதைத் தேர்வதிலே
விருப்பின்மை யொன்று வினையின்மை யொன்றருண் மேவலின்றிப்
பருப்பொரு ளோடு பயிறலொன் றேர்த்தது பார்த்திடிலே.

14.

பார்த்தன சிற்சில பாரா தனபல பார்த்தவற்றும்
பார்த்தன சிற்சில பாராத பல்லவிப் பார்த்தவுமே
பார்த்தில வாத்தனைப் பார்த்திடில் யாவையும் பார்த்தனவாப்
பார்த்தறி யாததைப் பார்க்கும் வழியொன்று பார்த்திலனே.

15.

பார்த்திலன் யாதொன்றும் பார்ப்பன பற்றிப் படுகுழியைத்
ஆர்த்தனன் பின்னுந் துயின்றனன் மேல்வரல் சூழ்ந்தொன்றுமே
யோர்த்திலன் என்னை யுடையதொன் றுண்டென் றுணர்ந்திலன்மெய்
வேர்த்தில னத்தை விரும்பிப் பிடிக்க விரைந்திலனே.

16.

விரையா தவனுண்மை வேண்டா தவனதை வேண்டியுள்ளங்
கரையா தவன்கண் கலுழா தவன்கண் டவர் தமைக்கண்
டுரையா தவனுரைத் தோரா தவன்மண்ணுக் கோவெரிக்கோ
விரையா பவனெவன் யானே யெவர்க்கு மெளியவனே.

17.

எவன்முற் றறிவன் வரம்பிலின் பத்தியல் பாமறிவன்
எவன்றன் றிறத்தன் குறைவும் வரம்புமி லாற்றலனெங்
கெவனெவ் வெ[illegible]வயுந் தனதிடத் தன்று னவற்றிடத்தன்
அவனெவ் வறிவையுங் கூருவித் தாண்டரு ளாள்பவனே.

18.

ஆண்டவ னுண்ட வருட்டிறத் தன்பர்க் கடிமைத்திறம்
பூண்டிலன் போற்றிப் புகழ்ந்தில னன்பிற் புகன்றிடுமுன்
வேண்டுவ தீதென் றறிந்தது செய்ய விரைந்திலன்யான்
மாண்டிலன் சோற்றுக்குக் கூற்றேர் சுமையிந்த மண்ணினுக்கே.

19.

மண்டெரி தற்றழல் வாய்மடுத் தும்மலைப் பாம்பதுபோற்
கண்டுயில் இன்றனன் கண்டிலன் காணுந் தொறுஞ்சவலை
புண்டெறு வேலிற் புகுந்தும் புறப்பொரு ளேபுணர்ந்து
கண்டு மகிழ்ந்தன னென்னிடை நின்னிடைக் கண்வளர்ந்தே.

20.

வளரிள ஞாயிறு போன்றனை ஞாயிற்றின் வாளொளியாற்
இளரிள வாள்வழி போன்றனர் மேலோர் விழிகிளரத்
தளரிருள் போன்ற தடையத் தடையற வேதடைதீர்ந்
தளபொருள் போன்றனை போது மவர்க்கெம் முடையவனே.

21.

உடையவ னேமுத லேயெவ் விடமு நிழற்றுமொற்றைக்
குடையவ னேநன்றுந் தீது நிறுத்தசெங் கோல்செலுத்தற்
கிடையவ னேநன்று தீதென் றிவற்ற தியல்பறியாக்
கடையவ னேனை யருள்கொடு காக்கக் கடனுனக்கே.

(இன்னும் வரும்.)

தி. பா. சிவராம பிள்ளை.

நாட்டுப் பாஷைகள்.

(*Taken from Hindu*)

இமயகிரிச் சாரலிலுள்ள "சிம்லா" என்னும் பட்டணத்தில், சென்ற செப்டம்பர் மாதம் நடந்த "எடியூகேஷனல் கான்பரன்ஸ்," என்ற இந்தியாவின் வித்தியாப்பியாச விஷயமாகச் செய்யவேண்டும் சீர்திருத்தங்களைப் பற்றி யாலோசிக்கவேண்டியதற்காக மாட்சிமை பொருந்திய வைசராயவர்களால் கூட்டப்பட்ட சங்கத்தில், வைசராயவர்கள் நாட்டுமொழிகளைப்பற்றிப் பேசியதென்னவெனின்;

"நாட்டுப்பாஷா வித்தியாப்பியாச விஷயத்தில் கவர்ன்மெண்டார் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யவில்லையென்று சிலர் நினைக்கிறார்கள். அவ்விஷயம் தீர்க்காலோசனைக் குரித்தாயும் தருக்கங்களுக் கிடங்கொடுக்கக் கூடியதாயுமிருக்கிறது. ஜனங்கள் அவர்களுடைய சொந்தப்பாஷையைப் படிக்கிற வழக்கம் தேய்ந்து மாய்ந்துபோய்விட்டது. இது ஒரு தவறு என்று நான் நினைக்கிறேன். நான் அவ்விதஞ் சொல்லுவதற்கு இரண்டு முக்கியகாரணங்களுண்டு. முதலாவது, நாட்டுப் பாஷைகள் இப்பெரிய கண்டத்தில் ஜீவனோடிருக்கும் பாஷைகள். (அதாவது, லத்தீன், சம்ஸ்கிருத முதலிய பாஷைகளைப்போன்று பேசுவார் தொகை கெட்டொழிந்து போகாமல் தற்காலம் எல்லாராலும் பேசப்பட்டு வழங்கிவரும் பாஷைகள்.) ஆங்கிலமோ அதிக சொற்ப ஜனங்களுக்கு மாத்திரந்தான் அறிவையும் நாகரீகத்தையும் புகட்டுகிற வோர் கருவியாயிருக்கிறது; ஆனால் மிக்க ஜனங்களுக்கும் அது, அவர்கள் பேசமுடியாததும் சில சமயங்களில் மாத்திரம் மற்றையோர் பேசக் கேட்கிறதுமாகிய வோர் அந்நிய பாஷையாயிருக்கிறது. நாட்டுப் பாஷைகளில் சுவையும் புராதன நூல்களுமில்லையானால் நான் அவைகளைப்பற்றி மேன்மையாய்ப் பேச அவ்வளவு பிரியமுள்ளவனாகவிருக்கமாட்டேன். பாஷா சிறப்புகளும் கற்பனாலங்காரங்களுமுள்ள நூல்களாகிய பெருமை வாய்ந்த பொக்கிஷங்களப்பாஷைகளிலிருப்பது யாவருக்குந் தெரிந்த விஷயம். ஆங்கிலப் பதங்களையும் கருத்துக்களையும் அற்பமுமறியாத அநேக கோடி ஜனங்களுக்கு, அவர்கள் நன்று யறியக்கூடிய பதங்களாலும் பொருட் செறிவுள்ள வாக்கியங்களாலும் தற்கால நூதன அறிவின் இரகசியங்களையுங் கூடப்புகட்

டுதல் கூடும். என்னுடைய இரண்டாவது காரணம் என்னுடைய அபிப்பிராயத்திற்கு மிகப் பொருத்தமுடையதாயிருக்கிறது. இந்தியாவில் பெரிய கெடுதியென்னை? ஜனங்களுடைய சந்தேகம், சாஸ்திரீகமற்ற அறிவு, கலகங்கள், குற்றங்கள், அதிருப்தி, கஷ்டங்கள். இவைகளுக்குக் காரணமென்னை? அறிவீனந்தான்; அறிவீனத்திற்கு மருந்தென்னை?—அதனைப் போக்குதற்கு வேண்டிய அறிவு. நாம் ஜனங்களுக்கு வித்தியாப்பியாசம் செய்வதற்குத் தக்கபடி அவர்களுடைய நிலைமையை சந்தோஷகரமுள்ளதாயாக்குவோம்; அவர்கள் எவ்வளவுக் கெவ்வளவு சந்தோஷகரமுள்ளவர்களாகிறார்களோ, அவ்வளவுக்கவ்வளவு ஜனசமுதாயத்தில் பிரயோஜனமுள்ளவர்களாவார்கள். நாட்டுப்பாஷா வித்தியாப்பியாசத்திற்கு நேரிடும் இடையூறுகளில் முக்கியமானது ஜனங்களிடத்திலிருந்தே யுண்டாகிறது. ஜனங்கள் கையிற் பணமுள்ளவர்களாகும்போது தங்களுடைய குழந்தைகள் ஆங்கிலங் கற்கவேண்டுமென்று விரும்புகிறார்கள். ஜமீந்தார்கள் இவ்வழக்கத்தை ஊர்ஜிதப்படுத்துகிறார்கள். டிஸ்திரிக்டு போர்டு, முனிசிப்பாலிட்டிக்காரர்கள் இவ்வழக்கம் நடப்பாகாமலிருக்கும்பொருட்டு ஒன்றுஞ் செய்கிறார்களில்லை. ஆகையால் சில மாகாணங்களில், நாட்டுப்பாஷா வித்தியாப்பியாசம் அநேகமாயில்லாமலே யிருக்கிறது; சில மாகாணங்களில் அற்ப அபிவிருத்தியுடையதாகவே யிருக்கிறது. இதற் தக்காரணம் முக்கியமாய்ப் பணவிஷயந்தான். பணம் வரக்கூடுமானால் அவ்வவ்விடங்களிலுள்ள கவர்ன்மெண்டு உத்தியோக நிர்வாகிகள் இவ்விஷயத்தில் அதிக மேன்மையான ஏற்பாடுகள் செய்யத்தயாரா யிருப்பார்களென்று நான் சந்தேகிக்கவில்லை."

நம் நாட்டு மொழிகளின் பெருமையை நம்மில் வேறுபட்ட அயல் நாட்டார் உள்ளவாறுணர்ந்து கொண்டாட, ஆங்கிலமும் தமிழும் கற்ற நம் நாட்டாரிற் சில கனவான்கள் நம் தாய் மொழியைப் புறக்கணித்து, இகழ்ந்து, தமிழ்ப் புத்தகத்தைத் தொடவும் தலை நடுங்குந் தன்மையராகின்றார். தமிழ் எனக் கேட்கவும் மனம் கூசுகின்றார். அந்தோ! தமிழே அமிழ்து எனக் கொள்வார் தொகை சுருங்க. இவர்கள் தமிழோ? உமிழ். எனக்கோடல் என்ன பரிதாபம்.

III

வாழ்க்கை வழுத்துரை. *

1. கனவென்று கானல் நீ ரென்றுலக வாழ்வை
 கைப்புரை பொதிந்து கவி செப்பிடுவ தென்னே ?
வினையொன்று மிலராவர் உயிரொன்று மிலரே
 மேதினியிற் றோற்றமென்ப மெய்யறியுங் குறியோ ?

2. வாழ்க்கை நிஜம் வாழ்க்கை பொருளார்க்கு மிவணம்மா !
 மய்யானம் உயிரடையும் மெய்யான முடிவோ ?
" தூட்கை பிறந்தாய் கடையில் தூளாவாய்" என்று
 சொன்னதுவும் மன்னுமுயிருன்னி எனலாமோ ?

3. இன்பமறத்துய்த்தும் வளரின்னலிடை எய்த்தும்
 இருப்பதுவோ நம் வாழ்வின் 'எழுதிவிட்ட' நோக்கம்
அன்பொடு "செய்வினை திருந்தச் செய்" நல்கல் தோறும்
 அடைவதற்கா முயர் நிலையே அடைவ மொருதலையே.

4. கடல்போல் நற்றொழில் பெரிது கால மிகச்சிறிது
 கல்லுடலம் படைத்தோரும் புல்லுவர்கள் மரணம் ;
அடல் பெரிய ரேனுமவர் இதயம் பிணப்பறையாய்
 அறைந்து சுடுகாடு மட்டும் அழைத்திடுவதன்றே.

5. விரிந்த செருக்களமாகும் மேதினியின் மீது
 வெருவி நின்ற ஆவெனவே வெம்பி வெம்பிக்கதறீர்
எரிந்த விழிச்சிய மொத்து, இடரணுகிற்றேனும்
 எதிர்ந்து வென்றி ஈட்டல் இசைநாட்டலன்றே நெடிது ?

* இஃது அமேரிக்கன் கவி லாங்க்பெல்லோ என்பவர் இயற்றிய ஸாம் ஆவ் லைவ் (Psalm of Life) என்னும் செய்யுளின் மொழிபெயர்ப்பு. சிற்சில வேறுபாடுகளும் ஆங்காங்கு செய்யப்பட்டுள.

6. வளர் சுகத்த தெனினும் வரும் பொழுதினை நம்பாதீர்
மாண்ட பெருங்கால மெலாம் ஆண்டொழிய மறவீர்
தளர்வகற்றி கையுறையு நிகழ்தனையே பற்றித்
தம்முளெண்ணிக் கடவுளெண்ணி வினைதரிமின் தரிமின்.

7. முன்னோரிலியம் நிறைந்த முதல்வர் கதை வாயே
முடிவிலியம் நாந்தேடமுடிவதென அறிந்தோம்
பின்னோர்க்கும் பிறவியெனும் பேரளக்கர் மாடே
பிறங்கு மணற்குறி தீட்டிப் பின்னர் உயிர் துறப்பேம்.

8. இந்த மணற்குறி கண்டு இரும்பிறவிக்கடலில்
இடைந்த கலமுடைந்த ஒரு ஏழை மனந்தேறி
சிந்து கணீர் போக்கி முறை செல்லுநெறி நோக்கி
சேர்வதற்காம் நல்விடமே சென்றகடவன் திடமே.

9. ஆதலினிந் நிலவரைப் பில் "முயற்சி திருவினையே
ஆக்கும்" என வெண்ணி மனவூக்கமொடு நீவிர்
சாதலெண்ணிச் சலியாது சால்புற வைகிடுமின்
தங்கடனியற்றி நலம் பின்றழைக்கு மென்றே.

K. N. சிவராஜ பிள்ளை, B. A.

முற்றிற்று.

இவற்றை எல்லாம் ஐயந்திரிபறத் துல்லியமாய், இடைவிடாத் தொடர்தரு காட்சியால், மதித்தறிந்து, சோதனையால் உண்மையெனக் கண்டு தாபித்தற்கு முன்னரே, ஏதேனும் ஒன்றிரண்டு காட்சிகளை ஆதாரமாகக் கொண்டு பொதுவிதிகள் ஏற்படுத்தத் துணிதல், சாஸ்திரவறிவாக மாட்டாது. ஆதலால் இந்நூலாராய்ச்சிக்கு வேண்டிய பிரமாணங்கள் அனைத்தையும், தேடிக் கண்டுபிடிக்கும் வரையும், இவ்வறிவு நூலறிவாக மதிக்கப்படமாட்டாது. ஆயினும் இதுமட்டும் சிற்சில உண்மைகள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவால் அவற்றை ஈண்டுக் கூறுதும். பூர்வகாலந் தொட்டு, மனிதர்களால் அறியப்பட்டிருக்கும் இடங்களில் இருக்கும் எரிமலைகளைப்பற்றிச் சிலாசாதனங்களும் சரித்திரங்களும் பற்பல விஷயங்களை நமக்குச் சொல்லுகின்றன. அவற்றுள் மதியறிவுக் கொவ்வாதனவற்றை நீக்கிவிட்டு, இசைவனவற்றைத் திரட்டி வைத்துக்கொண்டு, ஆராய்ச்சி முறையினின்று பிறழாமல், சோதித்துப் பார்த்ததில் பின்வரும் உண்மைகள் ஸ்தாபிக்கப்படுகின்றன.

(1) நீடித்த காலம் அடங்கிக்கிடக்கும் எரிமலை, புடைபெயர்ச்சியடையும்பொழுது, அப்புடைபெயர்ச்சி நீடித்த காலம் நிற்கும்; அல்லது ஊக்கம் மிகுந்திருக்கும்.

(2) நீடித்தகாலமாயோ, அல்லது ஊக்கம் மிக்குடையதாயோ, இருக்கும், புடைபெயர்ச்சியுடைய எரிமலை, பின் நெடுநாள் அடங்கியிருக்கும்.

(3) ஊக்கத்திலும் காலத்திலும் சிறுகியிருக்கும் புடைபெயர்ச்சி, அடிக்கடி நிகழும்.

(4) ஒருபெரிய எரி எறியின் ஊக்கம் அதன் கால நீட்சிக்கு எதிரிடையான அளவினதாயிருக்கும். என்பன.

கோளத்தின் உள்ளிடத்தில் பரக்கக் கிடக்கும் நீராவி, சேர்ந்து திரண்டு, மிகுந்த விசையுடையதாய், வெளியில் வருவதற்கு இடைவிடாமல் முயற்சித்துக் கொண்டிருக்கிறது. ஆயினும் அதை வெளியில் வரச்சம்மதிக்காமல் தடுக்க, மேலிடத்திருக்கும் பாரம், தன்னால் இயன்றமட்டும் சிரமிக்கின்றது. முடிவில், ஆவியின் ஊக்கம், அதன்மேலிருந்து அதனைக் கீழுற அமிழ்த்தும் தடையின் ஊக்கத்தைவிட, ஆற்றல் மிகுந்ததாகும்பொழுது, அத்தடையை நீக்கிக்கொண்டு புறப்படுகின்றது. எதிர்க்கும் பொருள் ஊக்கங் கூடுதலுடையதாயிருக்கும் வரையிலும், அடங்கியிருத்தலும், தன்வலி எப்பொழுது எதிரியின் வலியைவிட மேலானதாகின்றதோ அப்பொழுது மிகவிரைந்து அதிவேகத்தோடு அவ்வெதிரியை அடக்கி விட்டுத்தான் முற்றுகையை ஊடுருவிக் கொண்டு

வெளிப்பட்டுப் போய்விடுவதும், இயல்பேயன்றே ? முற் கூறிய நான்கு பொது விதிகளும் இவ்வுத்தியோடு இசைவுடையனவாயிருக்கக் காணலாம்.

இதுவரையும், இவ்வாராய்ச்சியினுடையவும், எரி எறியினுடையவும். தன்மை இன்னது என்பதை யெடுத்துரைத்தேம். இனி எரி எறித்தோழிலினால் வெளிப்படுத்தப்படும் பொருள்கள் இன்னவை யென்பதையும், அவற்றின் சக்தியையும், சிறிது விளக்கப்புகுவேம். லிப்பாரி, பான்ஸா என்ற தீவுகளின் பாறைகளினியல்பைப் பற்றி தோலோமியூ என்பவர் ஆராய்ச்சி செய்து ஒரு நூலெழுதியிட்டனர். அன்று தொட்டு இச்சாஸ்திர அறிவு நாளுக்கு நாள் மிகப் பரவுதல் பெற்றே வருகிறது. ஒரு பாறை, எவ்வெச்சினைகளாலாக்கப்பட்டிருக்கிறதென அறிந்து கொள்ளும் வழியை, பொருள் முயக்க சாஸ்திரம் (chemistry) நமக்குக் காட்டுகிறது. இப்பாறைகளிற் கலப்புண்டு கிடக்கும் படிக சாலங்கள் எப்படி யுண்டாகின்றன என்பதையும், என்னசுபாவங்களை யுடையன என்பதையும் உலோக இயல் தெரி சாஸ்திரம் (Minerology) தெரிவிக்கின்றது. கண்ணினுற் காண்பதற்கரிதான சிறுமை வாய்ந்த பல பொருள்கள் இப்பாறைகளிலிருக்கின்றன. அவற்றைக் கண்டறியும் வழியை நமக்குச் சிற்றுருவிளக்கி கற்பிக்கின்றது. இவ்வழிகளில் வல்லோர் ஆராய்ச்சி செய்து கண்டிருப்பவற்றைச் சிறிது கவனிப்போம்.

எரி எறிநிகழ்ச்சியில் ஏராளமாய்த் தோன்றுவது நீராவி; இவற்றோடு வேறுபல சாதனங்களுங் கலந்து கிடக்கின்றன. இப்பொருள்களின் குவியல்களே மலைகளாய் வளர்ந்து, முன் பூமியின் தரைமீதிருந்த வெடிப்புக்களையும், பிளப்புக்களையும், தன்னடியிடத்தனவாகச் செய்திருக்கின்றன. இம்மலைகளைத் துண்டித்து, அத்துண்டுகளின் தன்மையைச் சோதனை செய்து பார்த்தால், எரி எறி பிளவுகளின் வழியாய்வெளிப் போந்திருக்கும் பொருள்கள் இன்னவையென்பது தெளிவாய்த் தெரியும். அவற்றை எல்லாம் விரித்துரைப்பது இங்கு அசாத்தியமாம் ஆகலால் முக்கியமானவற்றை மாத்திரம் சிறிது கூறுவேம். நீராவி யோடு இலகுவான பல லவலேசங்களான பொருள்கள் தோன்றுகின்றன. அவற்றுள் நீர்ப் பைங்காற் புளிப்பும் (Hydrocloric acid) கந்தகப் புளிப்பும் கந்தகம் கலந்த நீர்வாகியும்(Sulphrretted Hydrogen) காரிப்புளிப்பும்(Corbonic acid) காரப்புளிப்பும் (Boraeic acid) முக்கியமானவை; இப்புளிப்புக்கால்களுடன் (acid gases) நீர்வாகி, (Hy-

drogln) லவணவாகி (Nitroglu) அம்மோணியமும், லேசப்பொருள்களாகிய ஆர்சனிக்கு, ஆன்றி மணி, இரசம் முதலியவைகளும் தோன்றும். சாதாரண நிலையில், காற்றில் பறக்குந் தன்மையுடைய தல்லாத சில பொருள்கள், எரி வெடிப்புக்களிலிருந்து வரும்பொழுது மிகலேசாயிருப்பதைக் கவனிக்க வேண்டும். இவை, யொன்றோடொன்று கலப்புண்டும், உறழ்ச்சியால் பிரிவுண்டும், புதிய புதிய சேர்க்கைகளுறுகின்றன.

நீர்வாகி, கந்தக நீர்வாகி போன்றவை இயற்கையில் எரி பொருள்கள் அன்று. ஆயினும் உஷ்ணம் மிகுந்த நிலையில் இவை வெளிப்பட்டுச் சாதாரண வாயுவுடன் சேர்க்கையுறும் பொழுது எரிகின்றன. இராக்காலத்தில் எரி எறி வாயைப்பார்ப்போர்க்குத் தீத்திரள் அவ்விடத்திலிருப்பதாகப் புலப்படுவது இக்காரணத்தாலேயே எனவறிக. இவற்றோடு பல்வேறு உலோக அணுக்களும் அக்காலத்தில் அகப்பட்டுக் கொள்ளுமெனில் இக்காட்சியும் பல்வேறு நிறங்களை யுடையன வாகும்.

இன்னும், எரி எறி வாய்வழி வரும் லேசப்பொருள்களிற் சிலது, குளிர்ந்த அந்தரிக்ஷத்தோடு கலக்கும்பொழுது, தங்குதல் பெறுகின்றது. வேறு சில ஒன்றோடொன்று ஐக்கியம்பெற்றுப் புதிதான சேர்க்கைப் பொருளாகின்றது. இப்படி இடைவிடாமல் எரி எறிவாய்களின் பக்கங்களிலும் உதடுகளிலும் இப்பொருள்கள் கூடிக்கொண்டே வருகின்றன,

இப்பொருள்கள் வியாபாரிகளுக்குப் பெருஞ் செல்வக் களஞ்சியமாயிருக்கின்றன. வல்கேன் என்ற எரிமலையின் உச்சியில் வேலைச் சாலைகள் பல ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இப்படிச் செய்திருப்பது ஓர் ஸ்காட்லாந்திய வர்த்தகக்கூட்டம். எரிவாயின் பக்கங்களில் எறியப்படும், இச்சாதனங்களைத்திரட்டி, மத்திய நாட்டிற்கு அனுப்பிவித்துக் கொண்டிருப்பதே இச்சாலைகளில் வேலைக்கேற்பட் டிருப்பவர்க்கமைந்த சோலியென்றால் இப்பொருள்கள் எவ்வளவு ஏராளமாய் அங்குண்டாகின்றன எனப் பிரத்தியேகம் எடுத்துச் சொல்லுதல் வேண்டாததாகுமே? அம்மலை அடிவாரத்திலிருக்கும் ஓர் கிராமத்தில், வேலைக்காரர்கள் குடியிருக்கின்றார்கள். அக்கிராமத்திலிருந்து மலையின் பக்கங்களுக்கு, வளைந்து செல்லும் பாதை வெட்டி விடப்பட்டிருக்கின்றது. எறிவாயினுள்ளிடத்திற் கிறங்கிப்போகப் படிகளும் அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். இப்பாதையின் வழியாய் இடைவிடாமல் கூலியாட்களும், பொதிக்கழுதைகளும் மேலுங்கீழும் போய்வருவதைப் பார்க்

கலாம் என்றால் இவ்வெரிமலையிலிருந்து இவ்வர்த்தகக் கூட்டத்தாருக்கு எவ்வளவு உலோகங் கிடைக்கவேண்டும் என்பதை ஊகித்தறிந்து கொள்வது பிரயாசமில்லை. இரண்டாயிர வருஷமாய், இம்மலை அடங்காத புடைபெயர்ச்சி யுடையதாயி ருந்திருப்பதாகச் சரித்திரங்களும் ஐதீகங்களும் கூறுகின்றன. 1786-ம் வருஷத்தில் உண்டான எறி மிகப் பெரிதாயிருந்ததாம். 1873-ம் வருஷத்தில் இம்மலை திடீரென்று கோபித்தது. வேலைக்காரர்களுக்கு மிக்க அபாயம் நேரிடுமெனக் கண்டு அவர்கள் ஓடிப்போக முயற்சித்தார்கள். எவ்வளவு முயன்றும் அவர்களிற் பலர் காயப்பட்டுத் துன்புற்றார்கள். இது சிறிது நாளில் சாந்த முற்றது. பிற்பட இதில் நின்று முன்னிலும் அதிகமாய்க் கனிப்பொருள் கிடைக்குமென்பதைக் கண்டு முன்னிருந்ததை விட வர்த்தக முயற்சியையும் வளர்த்தினார்கள் ஆயினும் பல நாட்கழிவதற்கு முன், வரவு வற்றிப்போகத் தொழிற்சாலையும் அங்கிருந்து நீக்கப்பெற்றது.

வெடி வாய் வழித்தோன்றிக், காற்றோடு கலந்தும், அதன் பக்கங்களில் தங்கியும், நீற்றும் லகுப்பொருளன்றி, பல கனப் பொருள்களும் எரி எறியால் உள்ளிடத்திருந்து வெளியிடத்திற் கொண்டுய்க்கப் படுகின்றன. இவை நாளுக்கு நாள் அதிகப்பட்டு மலையாகக் குவிதல் பெறுகின்றன. இம்மலைகள், அளவில் மற்றெம் மலைகளிற்கும் பிந்தினவையன்று. எட்னா. தெனரிப்பு. சிம்போராசு முதலிய மலைகள் இவ்வழித்தோன்றிய மலைகளே. பிளவு பட்டிருக்கும் பொருள் பாறையே என்பதற்குச் சந்தேகமில்லை. பூமியினுள்ளிடத்துப் பாறைகளுண்டு. உள்ளிடத்திருந்து வரும் ஆவிக்கூட்டம் தன்னாக்கத்தால், அப்பாறைகளைச் சிதற அடித்துக், மேலெழுப்பி, வெளியில் எறிந்துவிடுகின்றது. பாதாளத்திலிருந்து பலபொருள்கள், முழுதும் உருகியும், பாதியுருகியும், மேலெழும்பி, வெடிவாய்களின் வழியாய்ப் பொங்கி, வழிந்து குளிர்ந்து பக்கத்திலுறைகின்றன. அவையே இவற்றுளெல்லாம் அதிகமானவை. மணல்களும் சுண்ணாம்புக் கற்களும் மாக்கற்களும் கருங்கற்களும் இப்படியே அங்கு வந்து கும்பல் கும்பலாய்க் கூடுகின்றன. இவையனைத்துஞ் சேர்ந்தே எரிமலைகளாகின்றன. ஈப்பல் என்ற எரிமலை, மாக்கல் மலையாகவே யிருக்கிறது. அதனிடத்துண்டாகும் எரி எறிகளிலிருந்து மிகுதியாய்த் தோன்றுவது இன்றும் மாக்கற்பொடிகளேயாம். விசுவியஸ் மலை சுண்ணாம்புக் கற்கட்டிகளை ஏராளமாய் வெளியில் எறிகின்றது. அம்மலைப் பக்கங்களிலிருந்து வேண்டிய சுண்ணாம்புக் கற்களை யெடுக்கலாம்.

சாந்தோக்கியோப நிடதம்.

எ-ம் பிரபாடகம்.

௧. கண்டம்.

நாரத முனிவர் சனற்குமார முனிவரை யடைந்து "பகவானே! எமக்கு உபதேசஞ் செய்தருள்க" என்று பிரார்த்தித்தார். சநற்குமாரர் நாரதரை நோக்கி "நீர் கற்றிருக்கும் வித்தைகள் இவைகளென்று முன்னர்ச் சொல்லக்கடவீர். பின்னர் உமக்கே அதிதமானவைகளை நான் நீரறியும்படி உபதேசிப்பேன்" என்றார்.

அப்போது நாரதர், இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வவேதம், இதிகாசபுராணங்கள், வியாகரணம், சிராத்தகற்பம், கணிதம், உற்பாத ஞாந சாத்திரம், காலாதிகால சாத்திரம், தருக்கம், நீதிசாஸ்திரம், நிருத்தம், சிக்ஷை, கற்பம், பூதவித்தை, தநுர்வேதம், சோதிடம், காருடவித்தை, தேவசநவித்தை என்னும் இவைகளைக் கற்றிருக்கிறேன்.

நான் மந்திரமன்றி ஆத்மஞானத்தை அறிந்தவனல்லேன்; சோகபீடையுள்ளவர்கள் தம் போலிய பெரியோர்களாலே சோகம் நீங்குவார்களென்று கேள்விப்பட்டுள்ளேன்; பகவானே! நான் சோகமுள்ளோன்; அந்தக் சோகசாகரத்தைக் கடத்தற்கு எனக்கு அநுக்கிரகஞ்செய்யும் என்றார். அவரை நோக்கிச் சனற்குமாரர் சொல்லுவார். நும்மாலே படிக்கப்பட்டவைகளெல்லாம் நாம மாத்திரமேயாம்.

இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வவேதம், இதிகாசபுராணங்கள், வியாகரணம், சிராத்தவிதி, கணிதம், உற்பாதசாஸ்திரம், காலக்கிரமம், தருக்கம், நீதிசாத்திரம், நிருத்தம், தேவவித்தை, பூதவித்தை, வில்வித்தை, சோதிடம், சருப்பவித்தை, தேவசநவித்தை என்னும் நாமங்களை மாத்திரம் உபாசித்துவந்நீர்.

நாமமாத்திரமே பிரமமென்றுபாசிப்பவன் அந்த நாமத்தை யடைந்தவுடனே தான் விரும்பினவைகளைச் செய்ய வல்லவனுவன், என்றார். அப்போது நாரதர் பகவானே! நாமத்திலும் பெரியதாய் யாதேனும் ஒன்று உண்டா? என்றார், சனற்குமாரர் நாமத்திலும் பெரியனவாகச் சில பொருள்களிருக்கின்றன என்றார். நாரதர், அதனைத் தயையோடு வெளிப்படுத்தியருள வேண்டுமென்றார். சனற்குமாரர் சொல்வார்.

நாமத்திலுஞ் சத்தியமாக வாக்கே பெரியது. வாக்குத்தானே நான்கு வேதங்களையும் சுட்டிக்காட்டுகின்றது; வாக்குத்தானே இதிகாச புராணங்களையுஞ் சுட்டிக்காட்டுகின்றது; வாக்குத்தானே வியாகரணம், சிராத்தகற்பம், சகுந சாஸ்திரம், காலக்கிரமம், தர்க்கம், நீதிசாஸ்திரம், தேவவித்தை, பிரமவித்தை, பூதவித்தை, தநுர்வேதம், சோதிடம், காருடவித்தை, இரசாதிவித்தை முதலிய

வைகளைச் சுட்டிக்காட்டுகின்றது ; வாக்குத்தானே தேவுலகம், பஞ்சபூதங்கள், தேவர் மானுடர்கள், பறவை மிருகங்கள், தாவரங்கள், சுவாபதங்கள், கிருமிகீடாதிகள், புண்ணியபாவங்கள், சத்தியாசத்தியங்கள், ஒழுக்கம் முதலியவைகளையும் அறிதற்குக் காரணமாகின்றது. வாக்கில்லையாயின் ; புண்ணியபாவங்களையும், சத்தியாசத்தியம் முதலியவைகளையும் அறிந்துகொள்ளுதல் கூடாது. ஆதலால் வாக்கினை உபாசிக்கக்கடவீர்.

வாக்கினைப் பிரமமென்று உபாசிப்பவன் வாக் குலகத் தினையடைந்து விரும்பியதைச் செய்யவல்லவனாகிறான் என்றார். அப்போது நாரதர், வாக்கினும் பெரியதாய் யாதேனும் ஒன்றுண்டா? என்றார். சனற்குமாரர் வாக்கிலும் பெரிய பொருளுண்டென்றார். நாரதர், சுவாமீ! அதனையும் அறிவித்தருள்க என்றார். சனற்குமாரர் சொல்வார்.

வாக்கினுஞ் சத்தியமாக மனமே பெரியது. இரண்டு நெல்லிப்பழங்களையாவது, இரண்டு இலர்தைப் பழங்களையாவது ஒரு கையினுள்ளே அடக்கினால் அவைகள் அடங்குதல் போல நாமும் வாக்கும் மனத்திலே அடங்கிவிடும். ஒருவன் மந்திரங்களைக் கற்கவேண்டுமென்று மனத்திலே நினைக்கும்போது நினைத்த பிரகாரம் கற்கிறான். தொழில்செய்ய நினைக்கும்போது அதனைச் செய்கிறான். புத்திராதிகளை விரும்பும்போது அவைகளை அடைகிறான். இம்மை மறுமைகளை விரும்பும்போது அவைகளை அடைகிறான். ஆதலால் மனமே பிரமா ; மனமே ஆன்மா ; மனமே உலகங்கள், மனத்தை உபாசிப்பீராக.

மனத்தைப் பிரமாவாக உபாசிக்கிறவன் மனவுலகத்தை யடைந்து தான் விரும்பியதைச் செய்து முடிக்கிறான் என்றார். நாரதர், மனத்தினுஞ் சிரேட்டமுடையது யாதேனு முண்டா என்றார். சனற்குமாரர் மனத்தினுஞ் சிரேட்டமுடைய துண்டென்றார். நாரதர், அதனையும் அறிவித்தருள்க என்றார். சனற்குமாரர் சொல்வார்.

மனத்தினுஞ் சத்தியமாகவே சங்கற்பம் பெரியது, ஒருவன் சங்கற்பிக்கும்போது விருப்பமுடையவனாய் வாக்கினை உச்சரிக்கிறான். அந்த நாமத்திலே மந்திரங்கள் அடங்குகின்றன. மந்திரங்களுள்ளே சகல கருமங்களுமடங்குகின்றன.

சத்தியமாகக் கிரியைகள் சங்கற்பத்தினை யாதாரமாகக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்குச் சங்கற்பமே ஆத்துமா. அவைகள் சங்கற்பத்திலே பிரதிட்டையாகின்றன. பஞ்சபூதங்களுஞ் சங்கற்பமடைகின்றன. அவைகளுடைய சங்கற்பத்தினால் மழையும். மழையினால், அன்னமும், அன்னத்தினாற் பிராணிகளும், பிராணிகளான் மந்திரங்களும், மந்திரங்களாற் கருமங்களும், கருமங்களாற் பலனும், பலனாற் சகத்துஞ் சங்கற்பமடைகின்றது. ஆதலாற் சங்கற்பத்தை உபாசிப்பீராக.

சங்கற்பத்தினை உபாசிப்போன் சங்கற்ப வுலகத் தினையடைந்து தான் விரும்பியதைச் செய்ய வல்லனாகிறான் என்றார். நாரதர், சங்கற்பத்தினுஞ் சிரேட்டமுடையதுண்டா என்றார். சனற்குமாரர், உண்டென்றார். நாரதர் அதனையும் அறிவித்தருள்க என்றார்.

முடிந்தது.

ஜீவோபகாரியும் சீர்திருத்தக் கருவியும்

ஆகிய

இரசாயன தாது.

எரியக்கூடிய மரம்போன்ற வஸ்துக்களை எரித்த பின் மீந்திருக்கும் கருநிறம் பொருந்திய இருந்தை அல்லது கரி எவர்க்குந் தெரிந்த வஸ்துவே. அதை, சுத்தமான நிலையில், ரசாயன சாஸ்திரிகள் கரியமிலம் என்பார்கள். ஆகையால் அப்பொருட்கு மரக்கரி அல்லது நிலக்கரி என்ற தாழ்ந்த நாமங்களை ஒழித்து, சாஸ்திரயுக்தமான "கரியமிலம்" என்ற பெயரையே இங்கு உபயோகப்படுத்துகின்றேன். ஆனால் சிறிதுங் கலப்பின்றிச் சுத்தமாயிருக்கும் நிலையிற்றான் இப்பெயர் உபயோகிக்கற் பாலது. "வெளுத்ததெல்லாம் பாலல்ல, கறுத்ததெல்லாம் நஞ்சல்ல" இக் கரியமிலம் நிறத்திற்கறுப் பேனும், குணத்தில் தீங்கற்றதும் நன்மை பயப்பதுமாம். இது தாமதகுணமுடையதேனும் ஜீவராசிகளுக்கு ஆதாரமாய், இன்றியமையாததாயிருப்பதால் ஆச்சரியகுணமுடையதாம். யான் இங்ஙனங் கூறிய தென்னையோ வெனின், இக்கரியமிலமில்லாவிடின், நிலைத்திணையாகிய தாவரங்களும் இயங்குதிணையாகிய சங்கமங்களும் நிலைபெறுவென்பது உண்மை. இவ்விஷயத்தை மிகத் தெளிவாய்த் தெரிவிக்கும் வண்ணம், இக்கரியமிலத்தை பௌதீக (Physical) ரசாயன (chemical) அங்கதத்துவ (Phisiological) சாஸ்திரங்களின் வாயிலாய் நன்கு ஆராய்வாம். முதலில் அவ் வஸ்துவை பௌதிகத்தின்படி, அதாவது ஐம்புலன்களுக்கும் புலப்படும் தன்மையால் அல்லது அது புலப்படுதற்குரிய சாதாரண இயற்கை ஹேதுக்களால் விளக்கப் புகுகின்றேன்.

இவ் வண்டமானது அமைதற்கு ஆதாரமாயுள்ள பலவகைத் தாதுக்களில் இக் கரியமிலமொன்று. அது வெளித்தோற்றத்தில் அநேகவித வடிவங்களைப் பெற்றிருக்கின்றது. மிக்க காந்தியுடன் நாற்றிசையும் ஒளிபரப்பும் ஒள்ளிய வயிரமு மிதுவே; நமது, காகிதப் பென்சல் செய்யப்படுகிற (Graphite) காரீயமும் இதுவே; கேவலமான அடுப்புக்கரியும் பலவகை நிலக்கரியும் இதுவே; எனின் யார்தான் வியப்புறார்! கடினம், மிருது, காந்தி, கருமை, முதலிய மாறுன குணங்களையுடையனவாய்க், கிடைப்பதற்செளியனவும், அடைதற்கரியனவுமாகிய வெ

வ்வேறு வகைப்பொருள்களெல்லாம் இக்கரியமிலமேயெனின் யார்தான் நம்புவர்? இது கேட்போர்க்கு வியப்பைத் தருவதேனும் உண்மையில் அங்ஙனமே. இரசாயன சாஸ்திரிகள் பலர் ஒளிரும் வயிரத்தில் இதுகாறும் ஏனையோரால் கண்டறியப் படாத புதிய தாதுவைத் தாங் கண்டுபிடித்து அதனாலே தம்பெயரை நிலை நிறுத்தும்படி முயன்றும், நிலக்கரியிலுள்ள கரியமிலமேதுவோ அதைத் தவிர வேறொன்றையும் இதிற்கண்டனர் அல்லர். இக்கரியமிலப்பொருள்கள் வெளித்தோற்றத்தில் எங்ஙனம் பேசப்படுகின்றன வென்பதை முன்னர்ச் சற்றுக் கவனிப்பாம். இக்கரியமிலம் கலப்புப்பொருளாய்ப் பிற தாதுக்களோடு கூடி எத்துணை ஏராளமாய்க் காணப்படுகின்றதோ, அதற்கு மாறாய், அது தனிப்பொருளாயுள்ள வயிரம் அத்துணை அருமையாய் அகப்படுவது. இந்தக் கரியமிலமாகிய வயிரம் உலகத்திற் சிற்சில இடங்களிலேயே கிடைக்கின்றது. அவற்றுள், நம்மிந்து தேசமே முதன்மையிடம் வகிக்கத்தக்கது. நம் நாட்டிலுள்ள பெயர் பெற்ற கோல்கொண்டா வயிரக் கனிகளினின்று எடுக்கப்பட்ட வயிரமே காலஞ் சென்ற, மாட்சி தங்கிய நமது சக்கிரவர்த்தினியாருடைய கிரீடத்தில் ஒளிமலை (கோகினூர்) என்ற பெயரோடு பிரகாசித்துக் கொண்டிருந்தது. பிராஞ்சு தேசத்து ராஜகிரீடத்தை யலங்கரிப்பதும் உலகத்தில் இதுவரை கண்டெடுக்கப்பட்டவற்றுள் மிக நேர்த்தியானதுமான "ரீசென்ட்" என்னும் விலையுயர்ந்த வயிரமும் நமது தேசத்திலிருந்து கொண்டு போகப்பட்டதேயாம். அஃது 431 கிரெயின் நிறையுள்ளதும், ஏறக்குறைய புறாமுட்டைப் பரிமாணமுள்ளதும் இலட்சத்து இருபத்தையாயிரம் பவுண்டு மதிப்புள்ளதுமாயிருக்கிறது. சில இரத்தினப் பரீக்ஷகர் இதினு மிரு மடங்கு விலைமதிக்கிறார்கள். வயிரமானது இயற்கையில் தன் பளபளப்பான நிறத்தோடு காணப்படுகிறதில்லை. செங்கல்வர்ணமான ஓர்வகை மாசினால் பொதியப்பட்டுக் கிடக்கும், ஆகையால், நண்பர்காள்! நீவிர் எதாவது சந்தேகிக்கக் கூடியதாய் கூழாங்கற்களை எடுப்பின் அவற்றை தேய்த்துப் பாராமலே எறிந்துவிடாதிருக்கவேண்டுகிறேன். அதை உரைத்துப் பரீக்ஷியாது எறிந்துவிடுவீராயின் ஒருவேளை உமக்குக் கிடைத்த பெருஞ்செல்வத்தை இழந்தவராவீர். ஐதராபாத் தரசர் நிஜாமிடம் இப்போதிருக்கிற பேர்போன வயிரமானது விளையாட்டுக் கருவியாய் உபயோகப்படுத்திய ஓர் குழந்தையின் கையிற் காணப்பட்டதன்றே!

வயிரம் நாம் அறிந்தபொருள்கள் யாவற்றிலும் மிகக் கடினமானது. அது எவ்வளவு கடினமானதோ அவ்வளவு மிருதுத் தன்மையுடையது காரீயம் என்னலாம். மரக்கரி நிலக்கரி இவைகள் அவற்றின் இயற்கைக்குஞ் சேர்க்கைக்கும் தக்கபடி மேற்கூறிய இரண்டற்கும் இடையான தன்மையைப் பெறுவன.

283

ஒரு நாள் தன் கணவனால் ஏமாற்றப்பட்டு மோசம்போன ஒரு பெண் 'அழுத கண்ணும் சிந்திய மூக்கு, மாயங்கு வந்தனள்; அவளுக்குக் களிப்புத் தோன்றும்படியான இன்மொழிகள் பல கூறி யவள் கணவனை யவளிடம் வரும்படி செய்யச் சொல்லி அவளைத் துயராற்றி யனுப்பினள். மறு நாள் அவளது கணவனாகிய சிறுவன் அங்கு வர அவனை ஒதுக்கி "உன்னையே சரணமாக எண்ணிக்கிடக்கும் மெல்லியலை நீ ஏமாற்றுவதுனக்கு நீதியாகுமா? நீ கற்றறி மோழையா? உன்னையுலகத்தார்கள் மதிப்பார்களா? உனக்கு துல்லியமான ஆண் பிள்ளைகளிடத்தில் உன்னுடைய திறத்தைக் காட்டினால் நன்றாயிருக்கும் அதற்காற்றலில்லாமற் கதிவேறொன்றுமில்லாத ஒரு பெண் பிள்ளையிடம் இப்படிச் செய்வது தகுதியன்று; நல்லது, இதுவரையும் போனது போகட்டும்; இனியாவது நீ அவளைச் சரியாய் ஆதரித்து வரக்கடவை; இல்லையோ, உனக்கென் சாபம் நேரிடும் போகலாம்" என்றவனுக்கிதமான வசனங்களுடன் பயத்தையுங் காட்டி அனுப்பினள்; அன்று முதல் அத் தம்பதிகள் இணக்கமாய்க்காலங்கழித்து வந்தனர் என்பதற்கையமில்லை. இப்படியே இணை பிரிந்த பல தம்பதிகளையிவள் சேர்த்து வைத்ததுண்டு. வேறொரு நாள் காசி இராமேச்சுர முதலான இடங்களுக்குப் போய்ப் பல விரதங்கள் நோற்று வெகு நாட்சென்றபின் பிறந்த தனது ஒரே ஆண் குழந்தைக்கு தீரா நோய் வந்து பிடிபட்டுச் சங்கடப்பட்டுக் கொண்டிருந்த ஒரு தாய் தன் குழந்தையை எடுத்துக்கொண்டு போய் அவளிடம் தன் துயரத்தைச் சொல்லித் தாரை தாரையாய்க் கண்ணீர் பெருக்கி நிற்பதைக்கண்டு அவள் அங்கு கிடைக்கக் கூடிய மூலிகைகளைப் பிடுங்கி அதற்குக்கொடுத்து அக்குழந்தையைத் தன் கையில் வாங்கித் தடவியதற்கு 'நோயற்ற வாழ்வுண்டாகட்டு'மென்று ஆசீர்வதித்துக் குழந்தையைத் திரும்பித் தாய் கையிற் கொடுத்து விட்டு, அவளுக்குச் சில நாணயத்தையுங் கொடுத்து "இதைக் கொண்டு போய்க் குழந்தைக்கு வேண்டிய நல்ல பால் முதலிய ஆகாரங்களை வாங்கிக் கொடும், குழந்தை பிணி நீங்கிச் சுகமாயிருக்கும்," என்று நன்மொழி கூறி விடுத்தனள். இப்படியிவள் தீர்த்திருக்கும் பிணிகளும்பல. இவளைக் கண்டால் அழுத குழந்தைகள் உடன் சிரித்து விடும்; இதற்குக் காரணம் அவளுடைய அன்பும் ஆதரவுமே.

நாளடைவில் இத் தேவராட்டியின் பெயர் எங்கும் பரந்தது. இவள் முன்னிருந்தவளன்று என்றும் அவளினுமிவள் மிகப்பெரிய ஆற்றலுடையவ

284

ளென்றும், மாதர்குலத்துக்கிவளே யர
சியென்று கூறலாம் வனப்பும் தன்
மையுமுடையவளென்றும், அவளுடைய
திக்குரலோசை யொன்றே மனிதர்க
ளுடைய துக்கத்தை யாற்றுதற்குப்
பெருமருந்தாம் என்றும் அவளுடைய
வெள்ளியகைபட்டால் எல்லாப் பிணி
யும் தீர்ந்துவிடுமென்றும் பெருந்தொ
னி யெழும்பிற்று. அவளைக் காண்பதற்
கவ்விடம் வரும் சனங்கள் நாளுக்கு
நாள்அதிகப்பட்டே வந்தனர். இவளு
டைய ஆற்றலைக்கண்டு அதிசயிக்காதா
ரும் கேட்டு வியப்புறுதாரும் அந்நா
ட்டிலில்லையென்று கூறுமாருயிற்று.

இச்செய்கைகளால் செல்வியாள்
தானும், பிறருமறியாமலே காலவனு
டைய சக்தியோடு போரிட்டு அவன்
திறத்தை யழியாநின்ருள் என்றே கூ
றலாம். தான் உண்மையாய் நேசிக்
கும் தன் குடிகளி லெவர்க்கேனும்
அரசவிடமிருந்த தீங்கு விளைந்ததாக
க் கேட்டபொழுதெல்லாம் அவள் மிக
மனவருத்தங் காட்டி வந்தனள் ; இப்
படிச் செய்தவனை யெப்பொழுதும்
பலர் கேட்க நிந்தித்து கூறுவதவள்
வழக்கமாயிற்று. பணத்தினுலாவது
வாக்கினுலாவது அவர்க்குற்ற துயரத்
தை யாற்ற அவளுக்குத் திறமுளதாக
அவள் கண்டால் அவ்வாறு செய்யா
தொழிவதில்லை. இதனுல் சனங்களுக்கு
அரசனிடம் இயல்பாயுண்டாயிருந்த ப
கை விளைந்துகொண்டே வந்தது. இ
வளிடத்தில் நம்பிக்கையும் சிநேகமும்
வளர்ந்து வந்தன! அவளுடைய ஒவ்
வொரு செயலும் மொழியும் அவளுக்
குப் பலத்தையும் அரசனுக்கு நாசத்
தையும் வளர்த்து வந்தன. இப்படி
யரசன் மீது பகையை பரக்கச்செய்
வது நியாய விரோதமன்று என்றே
அவள் மனதிற் பட்டது ; ஏனெனில்
காலவன் கைவசப்படுத்தியாளும் நா
டு தன் நாடாதல் பற்றி. இயலுமெ
னில் அந்நாட்டையவனிடமிருந்து ப
றித்துத் தன் வசப்படுத்திக் கொள்ளவ
கை தேடுதல் நீதியே யன்ருே? வரவர
அவளுக்குத் துணைவலி கூடிற்று ; நா
ட்டிலுள்ள குடிக ளவளை நேசித்தார்க
ள் ; அவள் சொன்னல் தம் மாருயிரை
க் கூடவும் அவளுக்கெனக் கொடுக்க
ஆயத்தப்பட்டு நிற்பவர் பலராயினர் ;
நாட்டைக் கவர்ந்து கொண்டு சொடுங்
கோலியற்றி வரு மரசனை தாம் பகைத்
துவருவது போலவே அவளும் உள்
ளூறப் பகைத்து வருகிருளென்ப தவற்
கு நன்கு தெரியுமாதலால் அவள் அ
னுமதி கொடுப்பாளெனில் அவனுடை
யை மீறி நடக்கவும், வேண்டிவருமெ
ன்ருல் அவனேடு பகிரங்கமாய்ப் போ
ராடவும் அவர்கள் பின்னிடுபவர்கள
ல்லர் என்றறிந்தாள். மேலும் இவள்
தெய்வ வருளும் அமானுஷிகமான ஆற்
றலுமுடையாள் என்று பெரும்பான்

மையரால் மதிக்கப்பட்டு வந்தனள்; ஆதலால் நாடோறு மிரவில் இரண்டு நாழிகைப் பொழுது மாத்திரம் கண்ணுக்குப் புலப்பாடு காட்டி உடன் திடீரென்று மறைந்துபோகும் இவ்வணங்கு யார் என்று சோதித்தறிதற்குத் துணிவு அவளிடத் தவர்க்குளதாய பயத்தாலும் நேசத்தாலும் உண்டாயிற்றில்லை.

இச்செய்தி நாளடைவில் காலவன் காதிற்பட்டது; கேட்கத்தொடங்கின முற்பொழுதுகளில் அவன் சனங்களின் அறியாமையை நினைத்து நகையாடிவந்தான்; ஆயினும் வரவர அவன் மனதிற் சஞ்சலமுண்டாயிற்று. ஏனெனில் அவளுடைய அமானுஷீக ஆற்றலைப்பற்றிப் பற்பல அதிசயமான கதைகள் புறப்படத்தொடங்கின. ஒரு நாள் தானே நேரிற்போய் இவ்வதிசயங்களைச் செய்யும் தேவராட்டியைப் பார்த்துவர வேண்டுமென்ற அவாவுடன் நகர்ப்புறத்து யாருமறியா திறங்கிச் சென்றான்; போனபொழுது தன்னுடன் ஒருவரையுங் கூட்டிக்கொண்டு செல்லவில்லை. ஒருவாள் மாத்திரம் ஒரு பக்கத்தில் அரை வாரிற் கட்டித் தொங்கவிடப்பட்டிருந்தது.

“அம்மன் கொண்டாடிகளைக்கண்டு அஞ்சுபவன் பேடியன்றோ? யான் அத்தகையரிலொருவனல்லேன்; அவள் மாத்திரம் என் கண்ணிலகப்பட்டால் அவளுக்கு நான் நல்லபாடம் படிப்பித்து விடுவேன்; அதற்குப்பின் வாய்வந்தபடி யொன்றும் பிதற்றா வண்ணம் அவள் நாவை யடக்கிவிடுவேன்; அதனோடு, யாதொரு தொழிலுமில்லாமல் அவமே பொழுதைக் கொன்று தெருத்தோறும் அலைந்து பொய்யும் புரட்டும் பேசிக் கொண்டு திரியும் எம்போக்கிகளுக்கு ‘அரசனென்றால் பேயுமடங்கும் எனும் உண்மையைத் தெளிவுறுத்திக் காட்டா நிற்பேன்’ என்று கூறிக்கொண்டு புறப்பட்டான்.

புறப்பட்டது ஒரு இருட்செறிந்த இரவிலென்க. அரசன் தன் குதிரையை, அத்தேவராட்டியின் வீட்டிலிருந்து பார்த்தால் காணக்கூடிய தூரத்தில் ஒரு பதுக்கிடத்தில் கொண்டு நிறுத்திக்கொண்டு அங்கிருந்து, சனங்கள் திரள் திரளாய்ப் போவதையும் வருவதையும் பார்த்தான். சிறிது நேரங்கழிகையில் மின்னற் கொடிபோல் வெள்ளிய வோர் உருவம் கதவைத்திறந்துகொண்டு சரேலென்று வெளியிற் பாய்ந்து தன்னை மறைத்துக்கொண்

டவ் வழியாய் ஓடிப்போவதைக் கண்டு காலவனும் குதிரையை நையப்புடைத்துத் கையில் வாளை யுருவிப் பிடித்துக்கொண்டு மின்னற் பாய்வது போலதிவேகமாய் அவளைப் பின்றொடர்ந்து செல்லுமாறு தட்டிவிட்டான். அவள் முகம் உறையினால் மறைப்புண்டிருந்ததாற் சாயைகண்டறிதற்கு மிடமின்றாயிற்று. காலவன் குதிரைபோன போக்கிற்கு அவள் அவன் கையிலகப்படாதொழிய வகையொன்றுமில்லையென்று தான் சொல்லவேண்டும்; ஆனாலவள் பக்கிற் கடவுளருளிருந்தமை நன்கு விளங்கச் சிறிது தூரம் சென்றதும் அங்கோர் முடுக்குவழி புலப்பட்டது; அம்முடுக்கினுள் ஆடுமாடுகள் புகாமற் காத்தற்பொருட்டு அதன் தலையிடத்தில் இரண்டு மூன்று கற்றடைகள் நெருக்கமாய் நாட்டப்பட்டிருந்தன. அவற்றினிடையிற் புகுந்து போதல் சிறிது கனத்த உடல் உடையார்க்குவன்மையேயாம். காலவனோ குதிரையில் வருகின்றான்; அவ்விடைவழி குதிரைக்கிடங்கொடாது. தேவராட்டி ஒடுங்கியதும் சுவாதீனமுடையதுமான உடல்வாய்ப் பமைந்தவளாதல் பற்றிச் சிறிதும் பிரயாசையில்லாமல் கற்றடைகளினிடையிற் பாய்ந்து முடுக்கிற் புகுந்து வேடனால் துரத்தப்படு மான் போல் அதிவேகமாயோடிக் காலவன் கண்ணிற் புலப்படு முன்னமே அரண்மனை சேர்ந்தாள். காலவனுக்குத் தன் குதிரையை ஓரிடத்திற் கட்டிவைத்த பின்னன்றி ஓரடியெடுத்து வைக்கக்கூடாதாயிற்று. இதற்குச் சிறிது நேரம் வேண்டி வந்ததால் தேவராட்டிக்குந் தப்பிப் பிழைக்கப்போதுமான காலானுகூலம் வாய்த்தது. அரசன் குதிரையைக் கட்டி விட்டு அம்முடுக்கின் வழி அதிவேகமாய் கையால் வாளையும் வீசிக்கொண்டு தன்னாலியன்ற மட்டு மோடிப்போயும் அவள் அவன் கண்ணுக்குப் புலப்பட்டிலள். எட்டாத பழத்தைக் கண்டு கொட்டாவி விட்டுக் கொண்டுபோனவன் கதையாய் மறுபடியும் காலவன் உடலும் மனமு மொன்றுபோ லிளைத்துப் பெருமூச்சுடன் திரும்பித் தன் குதிரையிடம் வந்து அதனையவிழ்த்து இறுத்தி யதன் மீதேறி மெல்ல மெல்ல நடத்திக்கொண்டு அரண்மனை போய்ச் சேர்ந்தான்.

பிங்கல நிகண்டு.

அறிவுவிளக்க மென்னும் சிறந்ததோர் பத்திரிகையில் கனம் பொருந்திய அ.குமாரசுவாமிப் புலவரவர்கள் எழுதிய தமிழ்நூலாராய்ச்சி யென்னும் விடயத்தை நாமும் ஆராய்ந்தனம்.

இங்ஙனம் புலவர்கள் ஆராய்ச்சி செய்யாமையானே தமிழ் மொழிக்கட் குற்றம் பல்வுள வாகின்றன, இவ்வாராய்ச்சிக்கு நவி யுவகை கூர்கின்றுமேனும் மாட்சிமையுள்ள சிவன் பிள்ளையவர்கள் அச்சிட்ட பிங்கல நிகண்டின் மாத்திரம் எடுத்துக்கூறியன குற்றமாகாவென்பது எம்மனோர் துணிபு, எங்ஙனமெனின் கூறுதும்:—

1 உதகவன் என்பது கிருபீடயோனி யென்னும் பொருளும் பயக்கும், அஃது உதவகன் என சிலமாறியதெனலுமாம்.

2 கூடசதுரித்த மென்பது தமிழ் நடைக்குப் பொருந்தக் கூடசதுக்கமெனத் தற்பவமாயது.

3 ஆயகம் என்பது ஆயதகம் எனவுமாகும். வருடகம், வருண்டகம் வாருண்டகமெனவும் கடசம் கவாடசமெனவும் விஞ்ஞானம் விஞ்ஞபனம் எனவும் ஆதல்போல;

4 உறவரை உறவரி யென்பதன் திரிபு.

5 ஆக்கள் விரவலால் ஆவிரமெனவும் அவை நெருங்குதலான் வல்லி வல்லிய மெனவும்

6 திரட்டப்படலால் ஐய மெனவும் கவத்தா லாக்கப் படலால் கவீனமெனவும் பொருளபடலின் ஆவீரவல்லி ஐயங்கவீனம் என்பன ஒரு மொழி யல்லவாம்

7 காரிகம்என்பதுசெம்பொன்னின் தன்மையதெனப்பொருள்தருகின்றது. அல்லதூஉம் காரமென்பது பொன்னுகலின் காரத்தை நன்னிறஞ் செய்வது காரிக மெனலும் பொருந்தும். படிகார முதலியவற்றின் பொருளேனைக்கு மிஃதே, அவற்றை யெல்லா மீண்டு விளம்பில் பெருகும், இனிக் கைரிகம் வேறொரு சொல்லென்றுவது காரிகத்தின் திரிபென்றுவது கோடலாம்.

8 நாடென்னும் பொருளுணர்த்தும் சீமம் சீமை யென்பன எல்லைக்கு ஆகு பெய ராகிவந்தன, சிம் அவற்றுக்கு முதனிலை,

9 பிறப்பு விறப்பு என்பன ஒரு பகுதியி னின்று பிறந்துள்ளன,

10 தநப்பி துறுப்பி முதலியனவெல்லாம் நன்கு ஒத்திட்டுப் பாராமையான் வந்த வழுக்க ளாகும்.

இங்ஙனம்,

மாகறல், கார்த்திகேய முதலியார்.

சமாசாரக் குறிப்புகள்.

மின்னலினின்றுங் கட்டிடங்களைக் காக்கு முறை.—இது வரையில் மின்சாரத்தின் இடிகளினால் கட்டிடங்கள் உடைந்து போகா வண்ணம் மின்னலினின்றும் உண்டாகுஞ் சாரத்தை தன்னில் இழுத்துக் கொள்ளத் தக்க கம்பிகளைக் கட்டிடங்களின் மூலைகளில் செங்குத்தாய் நிறுத்தி வைத்திருப்பதுண்டு. பெரிய கட்டிடங்களாயிருக்குமிடத்து இம்மாதிரியான இரண்டு மூன்று கம்பிகள் மாத்திரம் போதாவாம்; கம்பிகள் அதிகமாய் வைக்கப்படவேண்டும். அன்றியும் கட்டிடத்தை யொட்டியிருக்குமாறு கம்பிகளை கட்டிடத்தைச் சுற்றி வளைத்தும் பொருத்த வேண்டும்.

செயற்கையில் ஆகும் பதனிட்ட தோல்.—(Artificial Leather) கோபர்த் என்னும் இடத்திலுள்ளவராகிய யுனைடெட் ஸ்டேட்ஸ் கன்ஸல் ஜனரல் சமீப காலத்தில் ஓர் பிரான்ஸ் தேசத்தான் (Fibroleum) என்னும் பெயரிய ஓர் செயற்கையில் ஆகும் பதனிட்ட தோலை ஜர்மன் அச்சில் அமைக்கும் தோலுக்கொப்பாயக் கண்டு பிடித்திருப்பதாய் அடியில் வருமாறு தெரிவிக்கிறார்.

பல வேலைகளிலும் கழிவாய் உபயோகமற்ற சிறு துண்டுத் தோல்களைச் சேகரித்து மிகவும் சிறியனவாகத் துணித்து ஒரு தொட்டியில (Alkaline Solution) காரக்கலவை நீரை நிறைத்து, அதில் இவைகளைக் கூழாகு மட்டும் ஊற வைத்து, எடுத்து இதற்கென்றே அமைக்கப்பட்டிருக்கும் யந்திரத்தில் வார்த்துப் பலகை போலாக்கி, பின்னும் காகித யந்திரத்தில் இட்டு அடிக்க அகன்ற மெல்லிய காகிதம் போலாகும். பின அதை வேண்டும் அளவுக்கு வடிவொத்த சமபாகங்களாகக் கண்டித்து, ஒன்றின் மேல் ஒன்றாய் 100 முதல் 1000 வரை அடுக்கி, சலில சாலன (Hydraulic Press) யந்திரத்திலிட்டு, உலர்த்தி எடுத்தால் விளையத்தக்க செவ்வையான பதன் பெற்ற தோல்களாகின்றனவாம். இவ்வகைத் தோல் நெருக்கவும், பல சித்திரம் பொருந்தும் வடிவமாகச் செய்து கொள்ளவும் தக்கதாம். இதைச் சுவரில் பதிக்கும் காகிதம் (Wall Paper) ஆகவும் உபயோகப்படுமாம். ஒன்றுக்கும் உதவாத முடைநாற்றமுள்ள சிறு தோல் துண்டுகளும், கைத்தொழிலை வல்ல இந்த பிரான்ஸ் கனவானால் எவ்வளவு மணம்பெற்றன.

இத்தகைய கைத்தொழிலாளர் தங்கட்குக் கிட்டிய எப்பொருளைத்தான் உபயோகம் வருத்தாது விலக்குவர்? (Extract).